# நகர் மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2019ம் ஆண்டு ஜீலை மாதம் 29.07.2019ம் தேதி திங்கட்கிழமை மாலை 04.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் (பொ) அவர்களது ஜீன் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 532** **நாள் 29.07.2019**
**அலுவலக குறிப்பு:- பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீன் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 533** **நாள் 29.07.2019**
**அலுவலக குறிப்பு:- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 3**

உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை திருவாரூர் கடிதம் ந.க.எண். 441/அ1/2018 நாள் 04.07.2019ந் தேதிய கடிதத்தில் 2017-18 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.71,088/- சம்மந்தப்பட்ட அரசு தலைப்பில் செலுத்திடவும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 1813/2015/பி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 534** **நாள் 29.07.2019**
**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 4**

இந்நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்று வரும் வாரச்சந்தையில் புதிய மின்வயர் மற்றும் இதரபொருட்கள் வாங்கும் பணிக்கு 24.07.2019 தேதி அன்று கோரப்பட்ட விலைபுள்ளியில் கீழ்கண்ட விலைபுள்ளிதாரர்களிடமிருந்து மூன்று விலைபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | மகாலெட்சுமி எலக்ட்ரிக்கல்ஸ் & பிளம்பிங் லெட்சுமாங்குடி | 12,350 |
| 2 | லைப் எலக்ட்ரிக்கல்ஸ் அப்துல் ரஹ்மான் ரோடு கூத்தாநல்லூர் | 12,660 |
| 3 | இந்தியா எலக்ட்ரிக்கல்ஸ் பைப் & கார்ப்பரேஷன் லெட்சுமாங்குடி | 13,485 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைபுள்ளிகளில் வ.எண் 1ல் உள்ள மகாலெட்சுமி எலக்ட்ரிக்கல்ஸ் & பிளம்பிங் லெட்சுமாங்குடி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைபுள்ளி தொகை ரூ. 12,350/- குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 490/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 535** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 5**

இந்நகராட்சி குனுக்கடியில் உள்ள உரக்கிடங்கினை சுத்தம் செய்யவும், கோரையாறு பகுதியில் சாலையோரங்களில் உள்ள கருவேல மரங்களை அகற்றவும், குனுக்கடி சாலையில் உள்ள கருவேலமரங்களை அகற்றவும், கோரையாறு சுடுகாட்டில் உள்ள முட்புதர்களை அகற்றும் பணிக்கு வாடகைக்கு JCB இயந்திரம் வழங்கும் பணிக்கு 29.07.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒப்பந்தபுள்ளி தொகை (ஒரு மணி நேரத்திற்கு)** |
|---|---|---|
| 1 | ஆர். விஜயகுமார் வடபாதி கூத்தாநல்லூர் | ரூ. 900 |
| 2 | சாய்ராம் ஸ்ரீ ஆண்டாள் லெட்சுமாங்குடி | ரூ. 950 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு விலைபுள்ளிகளில் வ.எண் 1ல் உள்ள ஆர். விஜயகுமார் வடபாதி கூத்தாநல்லூர் என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.900/- குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 531/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 536** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 6**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்தியா மார்க் II அடிபம்புகளில் 8வது வார்டு அப்துல் ரஹ்மான் சாலையில் உள்ள அடிபம்ப் மேல்பகுதி இல்லாமலும் பழுதாகி உள்ளது. மேலும் 1வது வார்டு கோரையாறு, வ.உ.சி காலனியில் உள்ள போர்வெல் மேல்பகுதி இல்லாமலும் நாகங்குடி மற்றும் அன்வாரியா தெரு இந்தியா மார்க் II அடிபம்ப் பழுதடைந்து உள்ளதற்கு, சிலிண்டர், Handset, Connecting Rod, 32 MM Pipe மற்றும் தளம் அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 537** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 7**

இந்நகராட்சிக்கு புதிய நகராட்சி கட்டிட வளாகத்தில் கூடுதல் பணிகளான அலுவலக முன்பகுதியில் ஜெனரேட்டர் மற்றும் மின்சார வசதிக்காக GI Sheet கொண்ட புதிய அறை அமைத்தல், Change Over Switch, EB Board, Executive table, Screen Arrangements, Office Name Board போன்ற பணிகள் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 10.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். /2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 538** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 8**

இந்நகராட்சி பகுதியிலுள்ள 24 வார்டுகளிலும் மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறை கையேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு சுய உதவிக்குழுக்கள், பள்ளிகள் மற்றும் குடிமக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரமென சுய அறிவிப்பு பெறப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற (ODF+) நகரமாக சுய அறிவிப்பு செய்யவும் மேற்படி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1051/2015/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 539** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

கூத்தாநல்லூர் நகராட்சி பராமரிப்பில் உள்ள 7½ HP Submersible Motor அடிக்கடி பழுதாவதால் குடிநீர் விநியோகம் செய்வதில் அதிக சிரமம் ஏற்படுகிறது. எனவே மேலும் Transformer - லிருந்து வரும் 7/20 Wire பழுதாகி எரிந்துவிடுகிறது. எனவே 8" போர்வெல்லில் உள்ள 7½ HP மோட்டாருக்கு பதிலாக புதிதாக Rewinding செய்யப்பட்ட 15 HP Submersible Motor 4 sqmm cable, 3" GI pipe, 3" coupling, 3" GI bend, 3" Green wire மற்றும் பராமரிப்பு செலவு உட்பட ஆகும் மதிப்பீடு ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 540** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 10**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பழைய நகராட்சி அலுவலக மோட்டார் அறை மற்றும் மேல்கொண்டாழி மோட்டார் அறையில் இயங்கி வந்த 20 HP Submersible மோட்டார்கள் 3 எண்ணிக்கை பழுதடைந்துள்ளது. மேற்படி இடத்தில் Standby யாக உள்ள 20 HP மோட்டார்களை தற்போது வரை பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே பழுதான 3 20 HP Submersible மோட்டார்களை முழுவதுமாக சீர் செய்திட ஆகும் மதிப்பீடு ரூ.95,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 541** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 11**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அலுவலக 3KVA ஜெனரேட்டர் சுமார் மூன்று ஆண்டுகளாக பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அதனை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், அம்மா உணவகத்தில் இயங்கி வரும் 1HP மோட்டார் பழுதாகி உணவு சமைக்க இயலாத நிலையில் உள்ளதால் அதனை உடனே சரி செய்யவும், நாகங்குடி மேலத்தெருவில் உள்ள மினிபவர் குடிநீர் தொட்டியில் உள்ள 1HP மோட்டார் பழுதாகி உள்ளதை பழுதுகள் நீக்கவும், மேற்படி இரண்டு மோட்டார்கள், ஜெனரேட்டர் பழுதுகள் நீக்கம் செய்ய ஆகும் மதிப்பீடு ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 542** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 12**

இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் முன்புறம் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு 23.07.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 856342 | 855833 | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.எஸ்.மோகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 856342 | 857005 | 0.08% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி 0.06% மதிப்பீட்டைவிட குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

(ந.க.எண் /2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 543** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 13**

இந்நகராட்சி புதிய அலுவலகத்தில் Flywood, Cubboard, Poly cabonile Sheet, Light fitting Teak wood Doors போன்ற பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 23.07.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 804329 | 803182 | 0.14% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.எஸ்.மோகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 804329 | 805659 | 0.17% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி 0.14% மதிப்பீட்டைவிட குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

(ந.க.எண் /2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 544** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 14**

இந்நகராட்சிக்குட்பட்ட கொரடாச்சேரி மெயின் சாலையில் உள்ள பகிர்மான குழாய் சுமார் 150 மீட்டர் வரை பழுதடைந்து குடிநீர் பகிர்மான குழாயில் குடிநீர் வராமல் மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனை சீர் செய்யும் பொருட்டு புதிதாக 3" பைப் 150 மீட்டருக்கு புதிதாக மாற்றிடவும் மற்றும் கோரையாறு.வ.உ.சி காலனி, செல்வி நகர் மெயின் சாலையில் உள்ள காங்கிரிட் பாலங்களை தேசிய நெடுஞ்சாலை மூலம் அமைக்கும் போது அதன் கீழ் செல்லும் குடிநீர் குழாய்களை சேதப்படுத்தியதை சீர் செய்யவும் மேலும் புதிய அலுவலக கட்டிடத்திற்கு தற்காலிக மின்சார இணைப்பிற்காக Wire வாங்கிடவும் ஆகும் மதிப்பீடு ரூ. 95,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 545** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 15**

மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண் 81/செ.ம.தொ.அ/2019 நாள் 07.2019ன்படி தமிழ்நாடு அரசின் மூன்றாண்டு சாதனைகள் குறித்த சிறப்பு மலர் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட உள்ளதால் கூத்தாநல்லூர் நகராட்சியில் நடைபெற்று முடிந்த பணிகள் மற்றும் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்த விபரங்கள் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்வதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 604/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 546** **நாள் 29.07.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

ஒம் /– திரு.ந.குமரன்
ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உ.ந.உ.ப/

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி